தமிழ்நாடு ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, சென்னை -600006

மாநிலத் திட்ட இயக்குநரின் செயல்முறைகள்

பிறப்பிப்பவர் : திரு. க. இளம்பகவத், இ.ஆ.ப

ந.க.எண்: ACE/118/ஆ3/CG-14/ஒபக/2023 நாள் : 11.01.2023

**பொருள்:** ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி - 12 ஆம் வகுப்பு மாணவர்களின் உத்தேச உயர் கல்வி விருப்பப் பாடப் பிரிவுகள்- நுழைவுத் தேர்வு தெரிவுகள் அறிதல் - அரசு மேல்நிலைப் பள்ளிகளில் 18 .01 . 2023 முதல் 23. 01. 2023 வரை மேற்கொள்ளப்பட வேண்டிய செயல்பாடுகள் வழிகாட்டு நெறிமுறைகள் வழங்குதல் - சார்ந்து.

**பார்வை:**
1. அரசாணை நிலை எண் : 5 பள்ளிக் கல்வித் (ப.க.5(1) துறை நாள் : 21.02.2022.
2. மாநிலக் கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம் கடிதம் ந.க. எண்:2818/ஊ 4/2022, நாள் : 08.11.2022

******

தமிழகத்தில் உள்ள அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளில் பயிலும் 12 ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் பொதுத் தேர்வு முடித்து, தாம் பெற்ற மதிப்பெண்கள் மற்றும் விருப்பத்தின் அடிப்படையில் உயர் கல்வி படிப்புகள் தொடரச் செய்தல் வேண்டும் என்கின்ற நோக்கில் ஒவ்வொரு மாணவர் மீதும் தனிக் கவனம் செலுத்தி ஊக்குவித்து உயர் கல்வி தொடர அரசு பல்வேறு முன்னெடுப்புகளை மேற்கொண்டு வருகிறது. இதன் தொடர்ச்சியாக, தற்போது பள்ளிக் கல்வித் துறையில் இவ்வாண்டு 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்களுக்கு உயர்கல்வி படிப்புகள் குறித்த விழிப்புணர்வு மற்றும் ஆர்வத்தை ஏற்படுத்தி, அதன் மூலம் அவர்களது உத்தேசமான உயர் கல்வி விருப்பப் பாடம் மற்றும் அப்படிப்புகளுக்கான நுழைவுத் தேர்வுகள் இருப்பின் அவற்றுக்குமான தெரிவுகளை மாணவர்களே செய்யவும் பள்ளிக் கல்வித் துறையின் "**நான் முதல்வன் இணைய தளம்**" (PORTAL) வழியாக முன்னெடுப்புகள் செய்யப்பட்டுள்ளது.

**உயர் கல்வி விருப்பப் பாடங்கள் தேர்வு**

இவ்வாண்டு 12ஆம் வகுப்பு பொதுத் தேர்வு எழுதவுள்ள அனைத்து மாணவர்களுக்கும் **நான் முதல்வன் இணைய தளத்தில்** உள் நுழைந்து (Login) தனக்கான லிங்கை கிளிக் செய்து அதில் கோரப்பட்டுள்ள விவரங்களும், 3 விருப்பப் பாட பிரிவுகளையும் அவற்றுக்கு நுழைவுத் தேர்வுகள் இருப்பின் அவற்றையும் தெரிவு செய்தல் வேண்டும். இச்செயல்பாடு 18.01.2023 முதல் 23.01.2023 வரை அனைத்து அரசு மேல்நிலைப் பள்ளிகளிலும் நடைபெறுதல் வேண்டும். அனைத்து மாணவர்களும் விருப்பப்பாடங்களை தெரிவு செய்துள்ளனரா என்பதனை பள்ளித் தலைமை ஆசிரியர் உறுதி செய்தல் வேண்டும்.

ஒவ்வொரு மாணவரும் தமது EMIS எண் மூலம் **நான் முதல்வன் இணைய தளத்தில்** உள் நுழைந்து செய்ய வேண்டியது யாது என்பது குறித்த வழிகாட்டல் தகவல்கள் காணொளி வாயிலாக வழங்கப்பட்டுள்ளது. (லிங்க் இணைப்பில் தரப்பட்டுள்ளது).

இக்காணொளியை பள்ளியில் உள்ள HI - TECH LABஇல் மாணவர்களுக்கு காண்பித்து அதன்பின் மாணவர்களே அத்தகவல்களை பதிவேற்றம் செய்ய வழிகாட்டிடல் வேண்டும். இவ்வாண்டு ஜனவரி மாதம் முதல் மே மாதம் வரையிலான உயர் கல்வி சார்ந்த பல்வேறு நுழைவுத் தேர்வுகளுக்கான அறிவிப்புகள் உயர்கல்வித் துறையினரால் வெளியிடப்பட்டுள்ள நிலையில் அதுகுறித்த தேதிகள், தகவல்கள் மற்றும் வழிகாட்டல்கள் மாநில திட்ட இயக்ககத்திலிருந்து பள்ளிகளுக்கு ஏற்கனவே வழங்கப்பட்டுள்ளது. அனைத்து 12ஆம் வகுப்பு மாணவர்களும் இச்செயல்பாட்டை கொடுக்கப்பட்டுள்ள நாட்களில் செய்து முடித்தல் மூலமாக எதிர் வரும் தங்கள் விருப்ப நுழைவுத் தேர்வுகளைத் தவற விடாமல் விண்ணப்பிக்கவும் அவற்றுக்கான தயாரிப்புகள் செய்து கொள்ளவும் வழிவகைசெய்யும்.

**முதன்மைக் கருத்தாளர்கள்பொறுப்புகள் (DIET FACULTIES):**

உயர்கல்வி வேலைவாய்ப்பு வழிகாட்டி பயிற்சி பெற்ற முதன்மைக் கருத்தாளர்கள் (பேராசிரியர்கள்) மற்றும் பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்கள் தங்களுக்கு ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ள அரசு மேல்நிலைப் பள்ளிகளை பார்வையிட்டு மேற்கூறிய தகவல்களை அனைத்து மாணவர்களுக்கும் வழங்கி, பின்னர் மாணவர்களிடம் 3 விருப்பப்பாடங்கள் தெரிவு செய்வதற்கான இச்செயல்பாடு மேற்கொள்ளப்படுவதை உறுதி செய்தல் வேண்டும்.

**வகுப்பு ஆசிரியர்கள் பொறுப்புகள்**

தங்கள் வகுப்பை சார்ந்த மாணவ மாணவிகள் விருப்பம் சார்ந்த படிப்புகள் குறித்த தகவல்கள் அந்தந்த வகுப்பு ஆசிரியர்களுக்கு கூடுதலாக தெரிந்திருக்கும் ஆகையால், வகுப்பு ஆசிரியர்கள் அவரவர் பள்ளிகளில் உள்ள உயர்கல்வி பயிற்சி பெற்ற ஆசிரியருடன் இணைந்து இச்செயல்பாட்டினை செய்திடல் வேண்டும்.

**மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள் பொறுப்புகள் (DCs)**

மாவட்டக் கல்வி அலுவலர்கள் வழிகாட்டுதலில் அந்தந்த பள்ளிகளின் தலைமை ஆசிரியர்களை தொடர்பு கொண்டு 18.01.2023 முதல் 21.01.2023 க்குள் இச்செயல்பாட்டை செய்து முடிக்க உறுதி செய்தல் வேண்டும். ஒவ்வொரு பள்ளியிலும் உள்ள உயர்கல்வி வேலைவாய்ப்பு பயிற்சி பெற்ற முதுகலை ஆசிரியர்கள் துணையுடன் மாணவர்கள் தாமே பதிவேற்றம் செய்வதை உறுதி செய்தல் வேண்டும்.

எனவே, அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் மேற்காண் செயல்பாடுகளை சார்ந்த முதுகலை ஆசிரியர்கள் மற்றும் தலைமையாசிரியர்கள் வாயிலாக 2022-2023 கல்வியாண்டில் 12ஆம் வகுப்பு பயிலும் மாணவர்கள் உயர்கல்வி தடையின்றி தொடர அவர்களது விருப்ப பாடப் பிரிகளில் 3 பிரிவுகளையும் நுழைவுத் தேர்வு விருப்பங்கள் மூன்றையும் முன்னுரிமை அடிப்படையில் தெரிவு செய்திடும் இச்செயற்பாட்டை குறித்த காலத்திற்குள் செய்திட பள்ளிகளுக்கு தகுந்த வழிகாட்டல் மற்றும் தகல்வல்கள்

வழங்கிட அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணைப்பு :You Tube link: https://drive.google.com/file/d/1JwV5-AJewKW0UrCNCP7HbsfjQx7slx4P/view?usp=sharing

மாநில திட்ட இயக்குநர்

**பெறுநர் :**

1. முதன்மை கல்வி அலுவலர்கள், அனைத்து மாவட்டங்கள்
2. இயக்குநர், மாநில கல்வியியல் ஆராய்ச்சி மற்றும் பயிற்சி நிறுவனம்.

**நகல்**

(முதன்மைக்கல்விஅலுவலர்வழியாக)

1. பேராசிரியர்கள், மாவட்டக் கல்வி மற்றும் ஆசிரியர் பயிற்சி நிறுவனம், அனைத்து மாவட்டங்கள்.
2. அனைத்து மாவட்ட ஒருங்கிணைப்பாளர்கள்.
3. அனைத்து வட்டார வள மைய மேற்பார்வையாளர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள், அனைத்து ஒன்றியங்கள்.
4. அனைத்து தலைமை ஆசிரியர்கள் (அரசு மேல்நிலைப் பள்ளிகள் மற்றும் மாதிரிப் பள்ளிகள்)